# குறுக்குவிசாரணை

| | | |
|---|---|---|
| வழக்கு எண் | :- | O.S.No.113/2013 |
| வாக்குமூலம் அளிக்கும் சான்றாளர் | :- | பி.வா.சா–03 (DW– 03) |
| பெயர் | :- | சுகவனேஷ்வரன் |
| தேதி | :- | 10–03–2026 |

**சான்றாளருக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது.**

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

முதல் விசாரணைக்கான ஆணையுறுதியில் கண்டுள்ள விவரங்கள் எனக்குத் தெரியும். நான் படித்து பார்த்துதான் கையொப்பம் இட்டேன். இந்த வழக்கு எதற்காக நடக்கிறது என்று தெரியுமா என்றால் தெரியும். பாகப்பிரிவினை கோரியும் என் பெயரில் உள்ள பொது பகர அதிகார பத்திரத்தை இரத்து செய்ய கோரியும் வழக்கு நடக்கிறது. எனக்கு பகர அதிகார பத்திரம் எழுதிக் கொடுக்கப்பட்ட சொத்து இதர சொத்துக்களும் பூர்வீக சொத்துக்கள் என்றால் சரிதான்.

இராஜேந்திரன் எனக்கு எழுதிக் கொடுத்த பகர அதிகார பத்திரத்தில் வாதிகள் கையொப்பம் இடவில்லை என்றால் சரிதான். இராஜேந்திரன் சொத்தை விற்க எனக்கு பகர அதிகார பத்திரம் எழுதிக் கொடுக்கவில்லை என்றும் அவர் என்னிடம் வாங்கிய 4,00,000/- உரூபாய் கடனுக்கு பிணையமாக எழுதிக் கொடுத்தார் என்றால் சரிதான். அந்த பகர அதிகார பத்திரத்தின் அடிப்படையில் நான் என் மனைவிக்கு 05.02.2013-ஆம் தேதியன்று கிரய ஒப்பந்த பத்திரம் பெயரளவில் எழுதினேன் என்றால்

சரிதான். என் மனைவி பெயரில் இருந்த ஒப்பந்தத்தை இரத்து செய்துவிட்டு 28.02.2013-ஆம் தேதியன்று என் மாமியாரான 03-ஆம் பிரதிவாதி பெயரில் மறுபயன் இல்லாமல் பெயரளவில் ஒரு விற்பனை பத்திரம் எழுதிக் கொடுத்தேன் என்றால் சரிதான். வழக்குச் சொத்து எங்கு உள்ளது என்று எனக்குத் தெரியாது என்றால் சரிதான். வழக்குச் சொத்து சம்மந்தமான வருவாய் ஆவணங்கள் அனைத்தும் இதுவரை இராஜேந்திரன் பெயரிலே உள்ளது என்றால் சரிதான். என் மாமியார் பெயரில் மாற்றப்படவில்லை என்றால் சரிதான். அதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான்.

என் மாமியார் பெயரில் வருவாய் துறை ஆவணங்களை மாற்றி கொள்ளாமல் 04-ஆம், 05-ஆம் பிரதிவாதிகள் பெயரில் 15.03.2013-ஆம் தேதியன்று கிரயப்பத்திரம் எழுதிக் கொடுத்தோம் என்றால் சரிதான். அவர்களிடம் நான் கடன் வாங்கியிருந்தேன். கடனுக்கு பிணையமாகதான் பத்திரம் எழுதிக் கொடுத்தேன். வழக்குச் சொத்தின் சுவாதீனம் இதுவரை வாதிகள், 01-ஆம் பிரதிவாதி ஆகியோரின் சுவாதீனத்தில்தான் உள்ளது என்று சொன்னால் சரிதான். நான் 5,00,000/-உரூபாய் கடன் கேட்டேன். 04-ஆம், 05-ஆம் பிரதிவாதிகள் 3,00,000/-உரூபாய் கடன் கொடுத்தார்கள். 01-ஆம் பிரதிவாதி இராஜேந்திரன் என்னிடம் வாங்கிய கடனை திருப்பி கொடுத்துவிட்டார் என்றால் சரிதான்.

என்னிடம் 01-ஆம் பிரதிவாதி வாங்கி கடனை ஏற்கனவே திருப்பி கொடுத்துவிட்டார் என்றும் வாதிகளோ 01-ஆம் பிரதிவாதிகளோ எனக்கு தொகை எதுவும் கொடுக்க கடமைபட்டவர்கள் இல்லை என்றும் சொன்னால் சரிதான். நான் 04-ஆம், 05-ஆம் பிரதிவாதிகளிடம் வாங்கி கடனை திருப்பி கொடுத்துவிட்டு பத்திரத்தை இரத்து செய்து வாங்கி 01-ஆம் பிரதிவாதி

மற்றும் வாதிகளிடம் கொடுக்க கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரிதான். என் பெயருக்கு கொடுக்கப்பட்ட பகர அதிகார பத்திரம் கடனுக்கு பிணையமாக கொடுக்கப்பட்டது என்றும் அதன் அடிப்படையில் நான் பின்னிட்டு எழுதிக் கொடுத்த கிரயப்பத்திரங்கள் யாவும் பெயரளவில் ஏற்பட்டவை என்றும் அவை யாவும் செல்லாது என்றும் சொன்னால் சரிதான். வாதிகள் கோரிய நிவாரணத்தை வழங்க எனக்கு ஆட்சேபணை இல்லை என்றால் சரிதான்.

Sd/-V. Pugazhenthi,
Additional District&Session Judge,
Salem.